கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.

முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி(FAC),
திருமங்கலம்.

2026ம் வருடம் ஏப்ரல் மாதம் 30ம் தேதி வியாழக்கிழமை

இடைநிலை மனு எண்.8/2026
இன்
அசல் வழக்கு எண்.257/2010

* * * *

1) ராஜம்மாள்
2) ராஜ் (இறப்பு)
3) பாண்டி
4) ஜெயச்சந்திரபாண்டியன்
5) ஜெயசுதா ... மனுதாரர்கள்/1 முதல் 5 பிரதிவாதிகள்

/எதிர்/

1) பால்ச்சாமி (இறப்பு)
2) கூடம்மாள்
3) சீனியம்மாள் (இறப்பு)
4) மின்னல்கொடி
5) அனுஷ்யா
6) ஜோதிபாசு
7) மோகன்குமார்
8) ராமையா (இறப்பு)
9) முருகானந்தம்
10) கவிதா
11) சரோஜா
12) வினோதினி
13) வினோத்
14) விஜயலட்சுமி ... 1 முதல் 14 எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

15) அமர்நாத்சாந்த்
16) சேகர் (இறப்பு)
17) உமா மகேஸ்வரி ... 15, 16,17 எதிர்மனுதாரர்கள்/
6, 7, 8 பிரதிவாதிகள்

இறுதியாக இம்மனு 22.04.2026ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள்/1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் திரு.P.G.அழகர்சாமி அவர்கள் ஆஜராகியும், 2, 4 முதல் 7 மற்றும் 9 முதல் 14 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு வழக்கறிஞர் திரு.M.பொன்னம்பலம் அவர்கள் ஆஜராகியும், 15, 17 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 1, 3, 8 மற்றும் 16ம் எதிர்மனுதாரர்கள் இறந்துவிட்ட நிலையில், மனு மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

## உத்தரவு

மனுதாரர்கள்/1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள நில அளவை பிரிவு, வட்ட துணை ஆய்வாளர் அவர்கள் சா.சா.ஆ.4 புலவரைப்படத்தின் அடிப்படையில் தாவா சொத்து புல எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம்

உள்ளது என்பதையும், இடத்தில் எவ்வளவு விஸ்தீரணம் இருக்கிறது என்பதையும் தெரிவிக்க மனுதாரர்கள் தரப்பில் சாட்சியாக விசாரணை செய்வதற்கு மேற்படியாருக்கு நீதிமன்றம் மூலம் அழைப்பாணை அனுப்ப உத்தரவிட வேண்டி கட்டளை 16 விதி 1(3) பிரிவு 151 cpc படி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையில், மனுதாரர்கள் வழக்கை தாமதப்படுத்தும் நோக்கத்தோடு இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர் என்றும், இம்மனுவை எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு செலவுத்தொகையுடன் சேர்த்து தள்ளுபடி செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

3. இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளிக்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

**<u>தீர்மானிக்க வேண்டிய விசயம்</u>** :

4. மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு நிலைக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u> :**

5. அசல் வழக்கானது கடந்த 2010 முதல் கடந்த 16 ஆண்டுகளாக நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில், இம்மனுவானது மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள நில அளவை பிரிவு, வட்ட துணை ஆய்வாளர் அவர்களை மனுதாரர்கள் தரப்பில் சாட்சியாக விசாரணை செய்ய உத்தரவிட வேண்டும் என தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. மேற்படி, மனுதாரர்கள் தரப்பு மனுவில் கூறியுள்ள சா.சா.ஆ.4 புல வரைபடத்தில் வழக்கு சொத்தின் புல எண்.212/6B க்குரிய அளவீடுகள் மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில், அதில் உள்ள அளவுகள் குறித்து வட்ட துணை ஆய்வாளர் தான் சாட்சியமளிக்க வேண்டும் என்ற மனுதாரர்கள் தரப்பு வாதமானது சட்டப்படியாக ஏற்கக்கூடியதாக இல்லை. மேலும், சா.சா.ஆ.4 ஆவணமானது கடந்த 18.07.2019ல் மேலக்கோட்டை கிராம நிர்வாக அலுவலரால் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், தாவா இடத்தில் எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்பது குறித்து வட்ட துணை ஆய்வாளர் சாட்சியமளிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளதை கருத்தில்கொள்ளும்போது, வட்ட துணை ஆய்வாளர் ஆவணங்களின் அடிப்படையிலேயே சாட்சியமளிக்க முடியும். ஆவணத்திற்கு முரணாகவோ,

அல்லது ஆவணங்கள் இன்றியோ வட்ட துணை ஆய்வாளர் கொடுக்கும் சாட்சியம் சட்டப்படியானதில்லை. இந்நிலையில், மனுதாரரின் இம்மனுவானது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** மனுதாரர்கள்/1 முதல் 5 பிரதிவாதிகளின் இம்மனுவானது தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.04.30 12:39:47 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி(FAC),
திருமங்கலம்.

**<u>இணைப்பு:</u>**

சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இருதரப்பிலும் தாக்கல் இல்லை.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.04.30 12:39:55 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி(FAC),
திருமங்கலம்.

இடைநிலை மனு எண். 8 /2026
அசல் வழக்கு எண்.257/2010
வரைவு/செவ்வை உத்தரவு
நாள் : 30.04.2026